Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 53 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW** : 4 |
| **Name** | : | திருமதி.மணிரத்தினம் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.08.2025**

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் கோவை மாவட்டம், நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து, கடந்த மே மாதம் 2017 ம் ஆண்டு பணி ஒய்வு பெற்று, நாமக்கல்லில் வசித்து வருகிறேன். கடந்த 2012 ம் ஆண்டு நான் மதுரை மாவட்டம் மேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது, கடந்த 27.03.2012 ம் தேதி காலை 09.15 மணிக்கு, மேலூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி.சகாயராணி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது, தும்பபட்டியைச் சேர்ந்த வீரணன் மகன் துரைராஜ் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவைப் பெற்று, நிலைய குற்றஎ ண்.249/2012 பிரிவு 174 குவிமுச ஆக வழக்கு பதிவு செய்துள்ளார்.

**புகார் மனு அதசாஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அதசாஆ.3 ஆகும்.** இந்த வழக்கில் தீக்காயங்கள் ஏற்படுத்திக் கொண்டு, இறந்து போன வாதியின் மகள் விஜயா என்பவர் திருமணமாகி 4 வருடங்களே ஆகியுள்ளதால், வழக்கின் அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் வழக்கின் ஒரு நகலை பெண் சார்பு ஆய்வாளர் திருமதி.சகாயராணி அவர்கள் தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, 26.03.2012 ம் தேதி காலை 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அலாவுதீன் மற்றும் கபிபுல்லா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளார். **பார்வை மகஜர் அதசாஆ.4, மாதிரி வரைபடம் அதசாஆ.5 ஆகும்.** அன்றைய தினமே, சாட்சிகள் அலாவுதீன் மற்றும் கபிபுல்லா ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 27.03.2012 ம் தேதி காலை 10.30 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து,

1) கனரக வாகனங்களுக்கு ஊற்றக் கூடிய GULF, 5 லிட்டர் ஆயில் கேன் ஒன்று, 2) Vorion என்ற குவாட்டர் ரம் பாட்டிலில் தயாரிக்கப்பட்ட மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று ஆகியவற்றை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில், அத்தாட்சியில் கைப்பற்றி சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளார். **அத்தாட்சி அதசாஆ.6 ஆகும். கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் முறையே அசாபொ.1 மற்றும் அசாபொ.2 ஆகும். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 95 அதசாஆ.7, கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் போட்டோ (1 எண்ணம்) அதசாஆ.8 ஆகும்.** 27.03.2012 ம் தேதி காலை 11.45 மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து, இவ்வழக்கில் இறந்து போன 3 வயது பெண் குழந்தை பிரியதர்ஷினியின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள்

முன்னிலையில்,விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.9 ஆகும்.** அன்றைய தினமே, சாட்சி செல்வம், த/பெ.கட்டையன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் தீக்காயங்களால் இறந்து போன விஜயா என்பவர், திருமணமாகி 4 வருடங்களில், வரதட்சணை கொடுமையால் இறந்துள்ளதாக மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் முதல்நிலை அறிக்கையின் அடிப்படையில், மேல் விசாரணைக்காக வரப்பெற்ற, மேற்படி வழக்குக் கோப்பை, மேலூர் வட்ட காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, வருவாய் கோட்டாட்சியர் திரு.துரைராஜன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **28.03.2012 ம் தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் முதல் நிலை அறிக்கை அதசாஆ.10 ஆகும். வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் வாக்குமூலங்கள் அதசாஆ.11 ஆகும். 14.09.2012 ம் தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் இறுதி அறிக்கை அதசாஆ.12 ஆகும்.** சம்பவ இடம் சென்று பார்வையிட்டபோது, அது ஏற்கனவே முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் அவர்கள் தயார் செய்திருந்த பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் உள்ளது போலவே சரியாக இருந்ததால் நான் தனியாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. 28.03.2012 ம் தேதி சாட்சி கட்டையன் மகன் செல்வம் என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலமும், சாட்சிகள் துரைராஜ், துரைராஜ் மகன் செல்வம், கண்ணன், அழகன் ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.03.2012 ம் தேதி சாட்சிகள் சசர் அலி, கிருஷ்ணன் ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.03.2012 ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவை 174 குவிமுச-ல் இருந்து பிரிவு 304(B) இதச ஆக பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். **பிரிவு மாறுதல் அறிக்கை**

**அதசாஆ.13 ஆகும்.** இவ்வழக்கின் எதிரிகளைத் தேடி வந்த நிலையில், 30.03.2012 ம் தேதி 16.00 மணிக்கு, தும்பப்பட்டி பேருந்து நிலையத்தில் இருந்த 1 வது எதிரி பழனியப்பன் என்பவரைக் காரணம் கூறி கைது செய்து, 16.45 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, திரேகப் பரிசோதனை செய்து, பாரா வசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் 2 முதல் 4 எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெற்ற பிணையில் சென்றுள்ளார்கள். 20.04.2012 ம் தேதி இறந்து போன சிறுமி பிரியதர்ஷினியின் பிரேதத்தைப் பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய மருத்துவர் திரு.அலாவுதீன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **சிறுமி பிரியதர்ஷினியின் பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.14 ஆகும்.** அன்றைய தினமே, தலைமை காவலர் 635 திரு.கண்ணனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.08.2012 ம் தேதி இவ்வழக்கில் இறந்து போன விஜயாவின் பிரேதத்தைப் பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய மருத்துவர்கள் திரு.நடராஜன், திரு.சிவராமசுப்பிரமணியன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **இறந்துபோன விஜயாவின் பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.15 ஆகும். 26.03.2012 ம் தேதி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் விஜயா அனுமதிக்கப்பட்டதற்கான விபத்து பதிவேடு நகல் நீமசாஆ.1 ஆகும். 26.03.2012 ம் தேதி மதுரை நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களால் பதிவு செய்யப்பட்ட விஜயாவின் மரண வாக்குமூலம் நீமசாஆ.2 ஆகும். 28.03.2012 ம் தேதி தீக்காயம்பட்ட விஜயாவின் இறப்பை உறுதி செய்த Death report நீமசாஆ.3 ஆகும்.** 30.08.2012 ம் தேதி காவலர் 1704 திரு.ராஜதேவன், பெண் சார்பு ஆய்வாளர் திருமதி.சகாயராணி ஆகியோரைத் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இருந்தும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும், 1 முதல் 4

வரையான எதிரிகள் மீது குற்றத்திற்கான ஆக்கக் கூறுகள் காணப்பட்டதால் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 304(B) இதச உடன் இணைந்த பிரிவு 34 படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)** :

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றும், புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் மட்டும் வாங்கிக் கொண்டு, பின்னிட்டு வழக்கிற்கு ஏற்றாற்போல் புகார் மனு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் 1 வது எதிரியைக் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள் அனைத்தும் வழக்கிற்கு ஏற்றாற்போல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை